இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 27-02-2024

# வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் அமைப்புகள்

புலனாய்வு அமைப்புகளை தனது வேட்டைக்கு பா.ஜ.க. பயன்படுத்தி வருவதாக பல ஆண்டுகளாக குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டு வருகிறது. அதற்கு மழுப்பல் பதில்களையே பா.ஜ.க. சொல்லி வந்தது. ஆனால் இப்போது அம்பலம் ஆகி இருக்கும் செய்திகள், அந்தக் குற்றச்சாட்டுகள் நூறு விழுக்காடு உண்மை என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை சோதனைகளுக்கு உள்ளான பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளதாகவும், இதுகுறித்து உச்ச நீதிமன்றக் கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

**காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் இந்தக் குற்றச்சாட்டை பகிரங்கமாக வைத்துள்ளார். கடந்த 4 ஆண்டுகளில் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. உள்ளிட்ட ஒன்றிய விசாரணை அமைப்புகள் பல்வேறு நிறுவனங்களில் சோதனை மேற்கொண்டதாகவும், இந்தச் சோதனைகளுக்குப் பிறகு 30 நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.**

அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைகள் மூலம் பல நிறுவனங்கள் பா.ஜ.க. அரசால் மிரட்டப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டிய ஜெய்ராம் ரமேஷ், இது அப்பட்டமான மாமூல் வசூல் என தெரிவித்துள்ளார். பா.ஜ.க.வுக்குக் கிடைத்த நன்கொடை குறித்து உச்சநீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும், இதுதொடர்பாக காங்கிரஸ் சார்பில் வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைக்குப் பிறகு பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கியது குறித்து ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடக் கோரி காங்கிரஸ் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**ஒரு பக்கம் தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூல், மற்றொரு பக்கம் சோதனைகள் நடத்தி பிளாக்மெயில் செய்து பா.ஜ.க. வசூல் வேட்டை நடத்தியுள்ளதாகவும், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை ஆகிய 3 அமைப்புகளும் பா.ஜ.க.வால் முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டினார்.**

ஒன்றிய பா.ஜ. அரசு கடந்த 2018-ம் ஆண்டு கொண்டு வந்த தேர்தல் பத்திரங்கள் திட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது. அரசியல் கட்சிகளுக்கு தொழில் நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி அளித்துவிட்டு அதற்கு கைமாறாக பிரதிபலன் எதிர்பார்க்க வாய்ப்பு உள்ளது என்றும், யார் நிதி அளித்தது என்ற விவரம் வெளிப்படையாக தெரிவிக்கப்படாமல் இருப்பதையும் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியது.

நிதி தந்தவர்கள், அதை பெற்றுக் கொண்ட கட்சிகள் பற்றிய விவரங்களை மார்ச் 13 ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவேற்ற தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ளது.

தேர்தல் பத்திரங்கள் திட்டம் மூலம் அதிகபட்ச நிதியைப் பெற்றது பா.ஜ.க. அந்த கட்சிக்கு மட்டும் கடந்த 2017-18 முதல் 2022-23ம் ஆண்டு வரை மொத்தம் ரூ.6,570 கோடி நிதி தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்திருந்தது. அந்த கால கட்டத்தில் விற்பனையான தேர்தல் பத்திரங்களில் 60 சதவீதம் பா.ஜ.வுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவை உண்மையாக வழங்கப்பட்ட நிதிகள் அல்ல என்பது அம்பலம் ஆகி உள்ளது.

தொழில் நிறுவனங்கள் மீது அமலாக்கத்துறை (ஈ.டி.), வருமான வரித்துறை (ஐ.டி.), சி.பி.ஐ.யை ஏவி அந்த நிறுவனங்களிடம் இருந்து பா.ஜ.வுக்கு தேர்தல் நிதி பெறப்பட்டதாக பிரபல ஆங்கில செய்தி இணையதளங்கள் ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டுள்ளன.

2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைகளை ஆய்வு செய்து இந்த தரவுகளை திரட்டிய அந்த இணையதளங்கள் அதனை அம்பலப்படுத்தி உள்ளன.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.வுக்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.வுக்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு வாரி வழங்கி உள்ளன.**

**4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது.**

**இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு நிதி தந்ததும் தெரிய வந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளன”** - என்று அந்த ஆங்கில இணைய தளங்கள் விரிவாக எழுதி இருக்கின்றன.

**ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ.யைப் பயன்படுத்தி தொழில் நிறுவனங்களில் ரெய்டு நடத்தி மிரட்டி பா.ஜ.வுக்கு தேர்தல் நிதி குவித்த விவகாரம் என்பது மாபெரும் நிதி மோசடியாகும். இதுதான் பா.ஜ.க.வின் உண்மை ஊழல் முகம் ஆகும். இதுதான் பா.ஜ.க.வின் மாடல் ஆகும். ஆட்சிகளை கவிழ்க்கவும் கட்சிகளை உடைக்கவும் இவைதான் பயன்படுத்தப்படுகிறது.**

## 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

# பெருவெள்ளம் - அதிகனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி - நெல்லை மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

தூத்துக்குடி, பிப்.27 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2024) தூத்துக்குடியில் - தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் நிகழ்ச்சியில், மொத்தம் 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் வரலாறு காணாத அதி கனமழைப் பொழிவு ஏற்பட்டது. இதில் குறிப்பாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் இந்த அதி கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டதால், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதோடு, வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும், பொது மற்றும் தனியார் கட்டமைப்புகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

கனமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு கூடுதலாக அமைச்சர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல், மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

அதிகனமழையால் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடுமையாக பாதிப்பிற்குள்ளான பகுதிகளை முதலமைச்சர் அவர்கள் 21.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, மழை வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கான நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணத் தொகுப்புகளை அறிவித்தார்.

கொரோனாவாக இருந்தாலும், வரலாறு காணாத புயல், வெள்ளமாக இருந்தாலும் மக்களுடைய துயரங்களை தீர்த்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மறுகட்டமைப்பு செய்ய ஒவ்வொரு தரப்பு மக்களுக்கும் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவது தான் திராவிட மாடல் அரசு. பாதிக்கப்படும்போது மட்டும் மக்களை பார்த்து விட்டு செல்லாமல், இறுதி வரை மக்களின் துயரங்களை துடைப்பதன் அடையாளமாகத் தான், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம், தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதிகனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

**தூத்துக்குடி மாவட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்**

கூட்டுறவு துறை சார்பில், பயிர்க் கடன், கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக் கடன், மகளிர் சுயஉதவிக் குழுக் கடன், சிறப்பு சிறு வணிகக் கடன், கால்நடை கொள்முதல் கடன், என மொத்தம் 4446 பயனாளிகளுக்கு 24 கோடியே 54 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பகுதி சேதமடைந்த மீன்பிடி விசைப்படகுகள், முழு சேதம் / காணாமல் போன மரப் படகு / பைபர் நாட்டுப் படகு, பகுதி சேதமடைந்த பைபர் நாட்டுப் படகு, வலைகள் மற்றும் இயந்திரம் சேதம், மீன் பண்ணைகள் சீரமைத்தல், உள்நாட்டு மீனவர்களின் காணாமல் போன வலைகள், என அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 5137 பயனாளிகளுக்கு 11 கோடியே 91 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நிதி உதவிகள்;

வேளாண்மைத் துறை சார்பில் அதிகனமழையால் ஏற்பட்ட வெள்ளதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 1,28,205 பயனாளிகளுக்கு 97 கோடியே 59 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள் மற்றும் தோட்டக்கலை துறையில் 41,498 பயனாளிகளுக்கு 25 கோடியே 88 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 20 பயனாளிகளுக்கு 19 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 150 பயனாளிகளுக்கு 12 கோடியே 43 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய்க்கான கடனுதவிகள்;

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் 3845 பயனாளிகளுக்கு 132 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

என மொத்தம் தூத்துக்குடி மாவட்டத்தில் 1,83,301 பயனாளிகளுக்கு 305 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**திருநெல்வேலி மாவட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்**

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் மழையால் சேதமடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் கட்ட தலா 4 இலட்சம் ரூபாய் வீதமும், பழுது நீக்க தலா 2 இலட்சம் ரூபாய் வீதமும், 779 பயனாளிகளுக்கு 17 கோடியே 98 இலட்சம் ரூபாய் நிதியுதவி;

**கடனை திருப்பி செலுத்த கால அவகாசம்!**

கூட்டுறவுத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வாங்கிட 4608 பயனாளிகளுக்கு 47 கோடியே 34 இலட்சத்து 28 ஆயிரம் கடனுதவி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்களுக்கு சிறப்பு கடனாக 2032 பயனாளிகளுக்கு 6 கோடியே 46 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் கடனுதவி, கூட்டுறவு வங்கியில் கடன் பெற்ற 202 பயனாளிகளுக்கு கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் வழங்குவதற்கான ஆணைகள்;

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை சீர்செய்திட 8 பயனாளிகளுக்கு 1 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

வேளாண்மைத் துறை சார்பில் அதிகனமழையால் ஏற்பட்ட வெள்ளதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 12,300 பயனாளிகளுக்கு 8 கோடியே 93 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகள் மற்றும் தோட்டக்கலை துறையில் 1305 பயனாளிகளுக்கு 68 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள்;

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சார்பில் 327 பயனாளிகளுக்கு 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் கடனுதவி;

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 210 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 16 கோடியே 15 இலட்சம் ரூபாய் கடனுதவி;

மீன்வளத்துறை சார்பில் மழை வெள்ளத்தால் படகுகள், எஞ்சின்கள் சேதமடைந்த மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கிடும் வகையில் 1053 மீனவர்களுக்கு 2 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மழை வெள்ளத்தால் கால்நடைகளை இழந்த 1051 விவசாயிகளுக்கு 6 கோடியே 95 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடனுதவி;

பள்ளிக்கல்வித் துறை சார்பில் மழை வெள்ளத்தால் பாட புத்தகங்களை இழந்த 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் 4803 மாணவ, மாணவிகளுக்கு புதிய புத்தகங்கள் வழங்குதல்;

வருவாய்த் துறை சார்பில் அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் உயிரிழந்த 11 நபர்களின் குடும்பத்தினருக்கு 55 இலட்சம் ரூபாய் நிதியுதவி, 6647 கால்நடை உயிரிழப்பிற்கு 1 கோடியே 68 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, சேதமடைந்த வீடுகளின் 1553 பயனாளிகளுக்கு 1 கோடியே 49 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

போக்குவரத்துத் துறை சார்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1556 வாகனங்கள் பழுது நீக்கப்பட்டது, மழை வெள்ளத்தால் வாகனங்களை இழந்த 69 பயனாளிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது;

என மொத்தம் திருநெல்வேலி மாவட்டத்தில் 38,514 பயனாளிகளுக்கு 118 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருவெள்ளம் மற்றும் அதிகனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகளாக மொத்தம் 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், அப்துல் வஹாப், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப.கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சியில் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப். 27 - தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.2.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், கரூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட, மாநகர, தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 முதலமைச்சர்; கழக தலைவர் அவர்களின் பிறந்த நாளினை எழுச்சியோடு கொண்டாடுதல்.

“நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்” கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நடத்துவது.

பாசிசத்தை வீழ்த்தும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுவதாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தெரிவித்துள்ளார்.




குறிஞ்சி இல்லத்தில் சவுதி அயலக தி.மு.க.வின் மூத்த அமைப்பாளர் சேலம் சிக்கந்தர் ஒருங்கிணைப்பாளர், ஜவகர் சவரி முத்து தயாரிப்பில், திரைப்பட இசையமைப்பாளர் தாஜ் நூர் இசையமைப்பில், கவிஞர் நாகூர் பாரியின் பாடல் வரிகளில், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் பாடிய “வந்தாச்சு வந்தாச்சு மாசம் ஆயிரம் என்ற பாடலின் ஒலிப்பேழையை கழக இளைஞர் அணிச் செயலாளர் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட, நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன், அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. ஆகியோர் பெற்றுக் கொண்டார்.